## (ஏ) விலைகளும் கூலிகளும்

### 1. விலைகள்

1970ஆம் ஆண்டில் விலைகள், நுகர்வோர் விலைக்குறிகாட்டியிற் காட்டப்பட்டுள்ளதுபோல 5.9 சதவீதத்தால் அதிகரித்தன. எனினும், இவ்வதிகரிப்பு முன்னைய ஆண்டினதைவிடக் குறைவானதாகும். கடந்த மூன்றாண்டுகளுக்குமுரிய விலைக்குறிகாட்டியின் சராசரி அதிகரிப்பு ஏறக்குறைய 5 சதவீதமாகும்.

உணவு, எரிபொருளும் வெளிச்சமும், மற்றும் பல்வேறு தொகுதிகளிலுமுள்ள பெருந்தொகையான பொருட்களின் விலைகளிற் குறிப்பிடத்தக்களவு விலை அதிகரிப்புகள் காணப்பட்டன. இவ்விலை அதிகரிப்புகள் நிருவாகக் கட்டுப்பாட்டுக்குட்படாத சில பொருட்களினதும் சேவைகளினதும் தொகுதிகளிலேற்பட்டன. பெரும்பாலான விடயங்களின் விலைகளிலேற்பட்ட இவ்வதிகரிப்பு, உள்ளூரினதும் இறக்குமதி செய்யப்பட்டதுமான நிரம்பற் காரணிகளினாற் பாதிக்கப்பட்டமை புலப்படுகின்றது. சில விடயங்களில் மொத்த விற்பனை வரிகள் விதிக்கப்பட்டமை விலைகளில் அதிகரிப்பு ஏற்படுவதற்குக் காரணமாக அமைந்தன. நிரம்பல், ஓரளவு அல்லது பெருமளவு நெகிழ்ச்சியற்றதாகக் காணப்பட்ட சிலசமயங்களில், கேள்வித்தாக்கம் விலைகளைக் கூர்மையாக அதிகரிக்கச் செய்தது. எனினும், ஆண்டின் இறுதிப் பகுதியில் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்ட விலைக்கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் மூலம் ஓரளவு நிதானமான நிலையினை அடைய முடிந்தபோதும், இது குறிப்பிட்ட சில விடயங்களில் மட்டுமே செல்லுபடியாயிற்று.

விலைகளின் பொதுமட்டத்தினைப் பாதிக்கும் மற்றுமொரு முக்கிய காரணி, கூலிகளாகும். உற்பத்திச் செலவின் கணிசமான அளவு, கூலியினாற் பங்குகொள்ளப்படுகிறது. எனவே, வெளியீட்டினைவிட இது வேகமாக அதிகரிக்கும்போது உற்பத்திச் செலவில் அதிகரிப்பை ஏற்படுத்துகிறது. உற்பத்தியாளர் தாங்களே இந்த அதிகரிப்பை ஏற்றுக்கொள்ளாதவிடத்து இந்த அதிகரிப்பு விலைகள்மீது நேரடித் தாக்கத்தை ஏற்படுத்தும். 1970ஆம் ஆண்டில் கைத்தொழிற்றுறையிலும், விவசாயத் துறையிலும் பல கூலி அதிகரிப்புக்கள் ஏற்பட்டன. இவை விலைகளில் மேல்நோக்கிய தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கும்.

மேற்கூறப்பட்ட காரணிகளைவிட பண விரிவின் வீதமும் விலைகளின் அதிகரிப்புக்கு ஓரளவு காரணமாக இருந்தது. 1970ஆம் ஆண்டின் முதல் 9 மாதங்களிலும் பண நிரம்பல் கணிசமானளவு அதிகரிப்பினைப் பதிவுசெய்தபோதும், முழு ஆண்டினையும் பொறுத்தவரையில் பண நிரம்பலின் சராசரி மாதாந்த மட்டம் முன்னைய ஆண்டினைவிட 4 சதவீதம் அதிகமாகவிருந்தது.

#### (அ) கொழும்பு நுகர்வோர் விலைக்குறிகாட்டி

எல்லா விடயங்களும் என்பதன் குறிகாட்டி 1969ஆம் ஆண்டின் 7.4 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடும்போது, 1970ஆம் ஆண்டின் 5.9 சதவீதத்தால் அதிகரித்தது. குறிகாட்டிகளுள் ஆகக்கூடிய பங்கினைக்கொண்டிருந்த உணவுக்குறிகாட்டி, 6.8 சதவீதத்தாலும், உடை 4.9 சதவீதத்தாலும், எரிபொருளும் வெளிச்சமும் 9 சதவீதத்தாலும், வாடகை 1.3 சதவீதத்தாலும், பல்வகைப்பொருட்கள் 4.1 சதவீதத்தாலும் அதிகரித்தன. 1969இன் தொடர்பான அதிகரிப்புக்கள் முறையே 5.5 சதவீதம், 9.0 சதவீதம், 21.0 சதவீதம், 6.8 சதவீதமும், 10.1 சதவீதமுமாகும்.

## அட்டவணை II (ஏ) 1

## கொழும்பு நுகர்வோர் விலைக்குறிகாட்டி

*( அடியாண்டு 1952 = 100 )*

| ஆண்டு | எல்லா விடயங் களும் | பண்ட வகைப்படி | | | | | துறை வகைப்படி | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | உணவு | உடை | எரிபொருளும் விளக்கும் | வாடகை | பல்வகைப் பட்ட பொருட்கள் | உள்நாட்டுத் தொகுதி | இறக்கு மதித் தொகுதி | ஏற்று மதித் தொகுதி |
| முக்கியத்துவம் | 100.0 | 61.9 | 9.4 | 4.3 | 5.7 | 18.7 | 60.0 | 35.0 | 5.0 |
| 1966 சராசரி | 112.3 | 109.1 | 117.0 | 95.9 | 101.5 | 127.3 | 116.8 | 105.4 | 127.6 |
| 1967 சராசரி | 114.8 | 112.7 | 116.7 | 96.5 | 101.5 | 128.9 | 117.1 | 111.2 | 123.9 |
| 1968 சராசரி | 121.5 | 121.2 | 120.1 | 103.2 | 101.5 | 133 6 | 123.2 | 117.3 | 142.4 |
| 1969 1ஆம் கால் | 127.7 | 125.3 | 129.5 | 118.6 | 104.3 | 143.9 | 130.1 | 121.0 | 159.8 |
| 2ஆம் கால் | 129.8 | 127.3 | 130.5 | 122.3 | 109.8 | 145.8 | 133.8 | 122.2 | 150.5 |
| 3ஆம் கால் | 130.4 | 126.8 | 130.8 | 129.4 | 109.8 | 148.7 | 135.1 | 123.7 | 132.5 |
| 4ஆம் கால் | 134.2 | 132.2 | 132.6 | 129.4 | 109.8 | 150.0 | 138.0 | 127.3 | 150.1 |
| சராசரி | 130.5 | 127.9 | 130.9 | 124.9 | 108.4 | 147.1 | 134.2 | 123.6 | 148.2 |
| 1970 1ஆம் கால் | 137.3 | 136.5 | 134.4 | 129.4 | 109.8 | 151.8 | 140.2 | 129.3 | 175.6 |
| 2ஆம் கால் | 138.5 | 137.0 | 137.0 | 138.3 | 109.8 | 153.2 | 144.3 | 128.8 | 150.7 |
| 3ஆம் கால் | 137.8 | 135.5 | 138.7 | 138.3 | 109.8 | 153.6 | 143.0 | 129.7 | 144.4 |
| 4ஆம் கால் | 139.1 | 137.2 | 139.0 | 138.3 | 109.8 | 154.4 | 144.2 | 129.5 | 158.5 |
| சராசரி | 138.2 | 136.6 | 137.3 | 136.1 | 109.8 | 153.2 | 142.9 | 129.3 | 157.3 |
| சதவீத அதிகரிப்பு 1969ஐ விட 1970இல் | 5.9 | 6.8 | 4.9 | 9.0 | 1.3 | 4.1 | 6.5 | 4.6 | 6.1 |

மூலம்: தொகை மதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களமும் இலங்கை மத்திய வங்கியும்.

1970ஆம் ஆண்டில் கடுகு, மிளகு என்பவற்றின் விலைகளில் 100 சத வீதத்துக்கு மேற்பட்ட அதிகரிப்புப் பதிவுசெய்யப்பட்டது. வெள்ளைப்பூடு, வேர்க்கொம்பு என்பவற்றின் விலைகளில் முறையே 64 சதவீதமும், 87 சத வீதமும் அதிகரிப்பு ஏற்பட்டது. பின்வரும் பொருட்களின் விலைகள் 20 சத வீதமளவில் அதிகரித்தன; சுவையூட்டும் பொருட்கள், செத்தல் மிளகாய், மஞ்சள், நற்சீரகம், கருவாடு ஆகியன. குறிப்பிடத்தக்க அளவு விலையதிகரிப்புகள் (10 சதவீதத்துக்கு மேல்) விஞகிரி, வாசனைத் திரவியங்கள், புளி, மரக்கறியும் பழங்களும், மாட்டிறைச்சி, ஆட்டிறைச்சி, உடன்மீன், பப்படம், விறகு என்னும் பொருட்களிற் பதிவு செய்யப்பட்டன. தானியவகை, கட்டிப் பால், பால் மா, சின்ன வெங்காயம், பம்பாய் வெங்காயம், வெண்ணெய், பழ ஊறல் (உள்ளூர்) என்னும் பொருட்களின் நிதானமான அளவு விலை அதிகரிப்புக்கள் (5 சதவீதத்துக்கு மேற்பட்ட) ஏற்பட்டன. உணவுப் பிரிவுப் பொருட்களில் பெரும்பான்மையானவற்றில் ஏற்பட்ட விலை அதிகரிப்புக்கு நிரம்பல், விநியோகக் காரணிகளே ஓரளவுக்குக் காரணமாகவிருந்தனவெனலாம்.

மிகவும் அருமையாகவே விலைகளில் வீழ்ச்சிகள் காணப்பட்டன. அவ்வாறு ஏற்பட்ட விலை வீழ்ச்சிகளும், ஒப்பிடும்போது முக்கியத்துவமற்றவையாகும். 1970ஆம் ஆண்டில் விலை வீழ்ச்சிகள் பதிவுசெய்யப்பட்ட பொருட்கள் பின்வருமாறு: தேயிலை, பெருஞ் சீரகம், கிருப்ட், வெண்ணெய்க் கட்டி, சேட் துணிகள், சாரங்கள், காவித் துணி, பனியன்கள், பட்டு, துவாயும் வீட்டு லினனும் ஆகும்.

துணிகளுக்கான குறிகாட்டி, 1969ஆம் ஆண்டின் 9 சதவீத அதிகரிப்புடன் பார்க்கும்போது 4.9 சதவீதத்தால் அதிகரித்துக் காணப்பட்டது. இது முக்கியமாக நீட்டுத் துணியின் விலைகளிலேற்பட்ட அதிகரிப்பினுலாகும். எனினும், 1970ஆம் ஆண்டில் உடை தொடர்புபட்ட சில பொருட்களின் விலைகளில் சிறிதளவு வீழ்ச்சி ஏற்பட்டது.

எரிபொருள்களுக்கும் வெளிச்சத்துக்குமான குறிகாட்டி முந்திய ஆண்டினது 21.0 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 1970ஆம் ஆண்டில் 9.0 சதவீதத்தால் அதிகரித்தது. குறிகாட்டிகளின் மேல்நோக்கிய தன்மை, விறகு விலைகள் கூர்மையாகஇந்த ஆண்டில் அதிகரிப்பதற்கான சாத்தியக் கூறுகளைப் பிரதிபலிக்கின்றது.

1969ஆம் ஆண்டினது 6.8 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடும்போது 1970 ஆம் ஆண்டில் வாடகைக் குறிகாட்டி 1.3 சதவீதத்தால் அதிகரித்தது. இது ஆய்வுக்குரிய ஆண்டில் வீட்டுவாடகைகள் ஓரளவு உறுதிப்படுத்தப்பட்டமையைக் காட்டுகிறது.

பல்வகைப்பட்ட பொருட்களுக்கான குறிகாட்டிகளின் அதிகரிப்பு முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 1970ஆம் ஆண்டிற் குறைவாகவே காணப்பட்டது. இந்த வகைப் பொருட்களின் விலையதிகரிப்புக்கு முக்கிய காரணம் மொத்த விற்பனை வரியில் ஏற்பட்ட அதிகரிப்பு எனலாம். எனினும் 1970ஆம் ஆண்டின் கடைசிப் பகுதியில் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்ட விலைக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் சில பொருட்களின் விலைகளைக் குறைப்பதற்கு உதவின (உதாரணம், அழகுதரு பொருட்கள், மருந்துகள், ஈருருளி டயர்களும் ரியூப்புக்களும், கல்வி தொடர்பான பொருட்கள்). இதன் மூலம் முழுவாண்டுக்குமான விலைகளின் பொது அதிகரிப்புக் குறைந்தது.

**(ஆ) நுகர்வோர் விலைக்குறிகாட்டிக்குள் உட்படுத்தப்படாத விலைகள்**

நுகர்வோர் விலைக்குறிகாட்டிக்குள் உட்படுத்தப்படாத சில குறிப்பிட்ட எண்ணிக்கை கொண்ட பொருட்களின் விலைகள் பற்றிய தரவுகள், வெளியிடப்பட்ட விலை நிரல்களிலிருந்தும், கொழும்பு நகரிலுள்ள சில்லறை வணிகர்களிடம் நேரடியாகச் சென்று விசாரித்துப் பெற்ற தகவல்கள் மூலமும் பெறப்படுகின்றன. இப்பொருட்கள் யாவும், நுகர்ச்சி, நடுத்தர, முதலீட்டுப் பொருட்கள் என்ற பரந்த முறையில் பாகுபடுத்தப்பட்டுள்ளன.

பின்வரும் அட்டவணை 1969 இறுதிக்கும் 1970 இறுதிக்கும் இடையில் தெரிவுசெய்யப்பட்ட பொருட்களின் விலைகளிலேற்பட்ட சதவீத மாற்றங்களை எடுத்துக்காட்டுகிறது.

## அட்டவணை II (ஏ) 2

### நுகர்வோர் விலைக்குறிகாட்டிக்குள் உட்படுத்தப்படாத விலைகள்*

| பொருள் வகை | சதவீத அதிகரிப்பு 1969/70 |
|---|---|
| **நுகர்ச்சிப் பொருட்கள்** | |
| காலணிகள் | - 12 |
| தையற் பொறிகள் | - 4 |
| பற்பசை | - 18 இலிருந்து 22 வரை |
| குடைகள் | - 17 இலிருந்து 28 வரை |
| மின்விளக்கும் டிரான்சிஸ்டர் பட்டரிகள் | - 12 இலிருந்து 16 வரை |
| சேட்டுகள் | - 15 இலிருந்து 29 வரை |
| சிலேட்டுகள் | - 5 இலிருந்து 20 வரை |
| கணிதத் துணைப் பொருட்கள் | - 15 |
| கரித்தாள் | +30 |
| உந்துவண்டித் துணைப் பொருட்கள் | + 6 இலிருந்து 30 வரை |
| பருத்தி நூல் | +22 |
| **நடுத்தரப் பொருட்கள்** | |
| உர வகைகள் | + 3 இலிருந்து 27 வரை |
| செப்புக் கம்பி | +15 |
| சோடாத் தூள் | +13 |
| பி. வி. சி. கலவை | +10 |
| **முதலீட்டுப் பொருட்கள்** | |
| தேயிலைப் பொறிகள் | +21 இலிருந்து 35 வரை |
| அரைக்கும் பொறிகள் | + 7 |
| பாதுகாப்புக் கவசக் கம்பி | + 7 இலிருந்து 24 வரை |
| மென்மையான உருக்கு | +12 |
| ஓடுகள் | + 9 இலிருந்து 20 வரை |
| ஒட்டுப்பலகை | + 2 இலிருந்து 17 வரை |

* பொருட்களின் வகைகளுக்கு எதிராகத் தரப்பட்டுள்ள சதவீத அதிகரிப்புக்கள் அவற்றிற்குரிய பொருட்களின் ஆகக் குறைந்த ஆகக் கூடிய சதவீத அதிகரிப்பைச் சுட்டிக்காட்டும்.

### நுகர்ச்சிப் பொருட்கள்

கொழும்பில் புழுங்கல் அரிசியின் ஆண்டுச் சராசரிச் சந்தை விலை 1969 ஆம் ஆண்டைவிட 1970ஆம் ஆண்டில் 3 சதவீதமளவில் வீழ்ச்சியைப் பதிவு செய்தது. 1970ஆம் ஆண்டின் முதற்பாதியில் சராசரி விலை, 1969ஆம் ஆண்டின் தொடர்பான காலப்பகுதியினையிட 5 சதவீதம் அதிகரித்தபோதும், 1970ஆம் ஆண்டின் பின்னரைப் பகுதியில் சராசரி விலை 1969ஆம் ஆண்டின் தொடர்பான காலப்பகுதியினைவிட 6 சதவீத வீழ்ச்சியைப் பதிவு செய்தது.

காலணிகளினதும், தையல் பொறிகளினதும் விலைகளில் வீழ்ச்சி ஏற்பட்டவிடத்து, கரித்தாளினதும், உந்து வண்டி உதிரிப்பாகங்களினதும், பருத்தி நூலினதும் விலைகளில் அதிகரிப்பு ஏற்பட்டது.

**விலைக்கட்டுப்பாடு**

இலங்கை அரசாங்கத்தினால் வெளியிடப்பட்ட 1970 செத்தெம்பர் 30, 1970 ஒற்ரோபர் 21, 1970 திசெம்பர் 11 ஆகிய சிறப்பு செய்தி மடல் (வர்த்தமானி)களின் விலைக்கட்டுப்பாட்டுக் கட்டளைகள் மூலம் பின்வரும் பொருட்களின் விலைகள் குறைக்கப்பட்டன. அவை, பற்பசை, மின்விளக்கு, டிரான்சிஸ்ரர் பட்டரிகள், குடைகள், சேட்டுகள், சிலேட்டுகள், கணிதத் துணைப் பொருட்கள் ஆகியனவாகும்.

**நடுத்தரப் பொருட்கள்**

உரங்களின் விலைகள் 3 சதவீதம் தொடக்கம் 27 சதவீதம் வரை அதிகரிப்பைப் பதிவுசெய்தவேளையில், செப்புக்கம்பி, சோடாத்தூள், பி வி. சி. கலவை என்பவை முறையே 15 சதவீதம், 13 சதவீதம், 10 சதவீதம் அதிகரித்தன.

**முதலீட்டப் பொருட்கள்**

மென்மையான உருக்கு, அரைக்கும் இயந்திரங்கள் ஆகியவற்றின் விலைகள் முறையே 12 சதவீதத்தாலும் 7 சதவீதத்தாலும் அதிகரித்தன. தேயிலை இயந்திரங்கள், ஓடுகள், இரப்பர் சுற்றப்பட்ட கம்பிகள், ஒட்டுப்பலகை என்பவற்றின் விலைகளில் முறையே 21 தொடக்கம் 35 சதவீதம் வரையும், 7 தொடக்கம் 24 சதவீதம் வரையும், 9 தொடக்கம் 20 சதவீதம் வரையும், 2 தொடக்கம் 17 சதவீதம்வரையும் அதிகரிப்புகள் பதிவுசெய்யப்பட்டன.

**2. கூலிகள்**

மத்திய வங்கியானது, அரசாங்கத் துறையின் தொழில்நுட்ப ஊழியரும் எழுதுவினைஞரும், சிற்றூழியர்கள், பள்ளிக்கூட ஆசிரியர்கள் ஆகியோர்களின் கூலி வீதக் குறிகாட்டிகளைத் தயாரிக்கின்றது. இவை தேர்ந்தெடுக்கப்பட்ட தரங்களுக்குக் கொடுக்கப்படற்பாலதான தொடக்கக் கூலிகளையும், சம்பளங்களையும், சலுகைப் படிகளையும் கொண்டு கணிக்கப்பட்டதேயன்றி, சம்பள உயர்வு, மேலதிக வேலை நேரக் கொடுப்பனவுகளை உள்ளடக்கமாட்டா. தனியார் துறையிலுள்ள கூலிச் சபைகளின் கீழுள்ள விவசாய, கைத்தொழில், வர்த்தகத் துறை முதலிய தொழிலாளர்களின் கூலிவீதக் குறிகாட்டிகளை தொழிற்றிணைக்களம் வெளியிடுகின்றது. இவை கூலிச் சபையினால் நிருணயிக்கப்பட்ட மிகக் குறைந்தளவு கூலி வீதங்களை ஆதாரமாகக் கொண்டிருந்தன. 1967ஆம் ஆண்டு திசெம்பர் தொடக்கம் நாணயப் பெறுமதியிறக்கச் சலுகைப் படிகளையும் உள்ளடக்கின. இக்குறிகாட்டி எண்களின் அடியாண்டு 1952 ஆகும்.

மேற்கூறப்பட்ட கூலிவீதக் குறிகாட்டிகள், மேலதிக வேலை நேரக் கூலியை உள்ளடக்கிய உண்மை வருமானங்களை வெளிப்படுத்துவதில்லை. தனியார் துறை ஊழியர்களின் விடயத்தில் மிகை ஊதியம் போன்ற தூண்டுதலுக்கான கொடுப்பனவுகளையும் அல்லது சிறப்புக் கொடுப்பனவுகளையும் உள்ளடக்கா. உண்மைக் கூலிவீதக் குறிகாட்டிகள், கூலி வீதத்தினை வாழ்க்கைச் செலவுக் குறிகாட்டிகளினாற் சுருக்குவதன் மூலமே மத்திய வங்கியினாற் கணிக்கப்படுகின்றன (கொழும்பு நுகர்வோர் விலைக் குறிகாட்டி).

பின்வரும் அட்டவணை 1969ஆம், 1970ஆம் ஆண்டுகளின் அரசாங்க ஊழியர்களினது ஆண்டு, காலாண்டுக் கூலிவீதக் குறிகாட்டிகளையும் உண்மைக் கூலிவீதக் குறிகாட்டிகளையும் காட்டுகிறது.

### அட்டவணை II (எ) 3

### அரசாங்க ஊழியர்களின் கூலிவீதக் குறிகாட்டி எண்கள் 1952 = 100

| | தொழில்நுட்ப எழுதுவினைஞர் தர ஊழியர்கள் | | சிற்றூழியர்கள் | | மத்திய அரசாங்க ஊழியர்கள் (அ) | | அரசாங்கப் பள்ளிக் கூட ஆசிரியர்கள் | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | கூலி வீதக் குறி காட்டி கள் | உண்மைக் கூலிவீதக் குறிகாட்டி கள் | கூலி வீதக் குறி காட்டி கள் | உண்மைக் கூலிவீதக் குறிகாட்டி கள் | கூலி வீதக் குறி காட்டி கள் | உண்மைக் கூலிவீதக் குறிகாட்டி கள | கூலி வீதக் குறி காட்டி கள் | உண்மைக் கூலிவீதக் குறிகாட்டி கள் |
| 1969 1ஆம் காற்பகுதி | 140.1 | 109.7 | 163 0 | 127,6 | 152.6 | 119.5 | 129.6 | 101.5 |
| 2ஆம் காற்பகுதி | 140.1 | 107.9 | 163.0 | 125.5 | 152.6 | 117.5 | 129.6 | 99.8 |
| 3ஆம் காற்பகுதி | 140.1 | 107.5 | 163.0 | 125.0 | 152.6 | 117.0 | 129.6 | 99.4 |
| 4ஆம் காற்பகுதி | 157.2 | 117.2 | 182.9 | 136.3 | 171.3 | 127.7 | 141.1 | 105.2 |
| சராசரி | **144.4** | **110.6** | **168.0** | **128.6** | **157.3** | **120.4** | **132.5** | **101.5** |
| 1970 1ஆம் காற்பகுதி | 157.2 | 114.5 | 182.9 | 133.2 | 171.3 | 124.7 | 141.1 | 102.7 |
| 2ஆம் காற்பகுதி | 157.2 | 113.5 | 182.9 | 132.1 | 171.3 | 123.7 | 141.1 | 101.9 |
| 3ஆம் காற்பகுதி | 157.2 | 114.1 | 182.9 | 132.7 | 171.3 | 124.3 | 141.1 | 102.4 |
| 4ஆம் காற்பகுதி | 157.2 | 113.0 | 182.9 | 131.5 | 171.3 | 123.2 | 141.1 | 101.4 |
| சராசரி | **157.2** | **113.8** | **182.9** | **132.4** | **171.3** | **124.0** | **141.1** | **102.1** |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

(அ) எழுதுவினைஞர்கள், தொழில்நுட்ப ஊழியர்கள், சிற்றூழியர்களுக்கான குறிகாட்டி.

குறிப்பு: குறிகாட்டிகளாவன 1959 செத்தெம்பர் 30இல் வேலைக்கமர்த்தப்பட்டோரின் அடிப்படையின் ஒரு நிலையான மதிப்பீட்டிற் கணிக்கப்படுகின்றன. குறிகாட்டிகளைக் கணக்கிடுவதில் பயன்படும் கூலிவீதங்கள், ஒவ்வொரு தேர்ந்தெடுக்கப்பட்ட தரங்களுக்குரிய தொடக்கச் சம்பளம், கூலிகள், படிகள் ஆகியவற்றினைக் கொண்டுள்ளன.

1969ஆம் ஆண்டின் சம்பள ஆளணி ஆணைக்குழுவின் இடைக்கால அறிக்கையில் விதந்துரைக்கப்பட்டவண்ணம், 1969 ஒற்றோபரிலே திரட்டப்பட்ட சம்பளங்கள் வழங்கப்பட்டமையின் விளைவாக 1970ஆம் ஆண்டு முழுவதும் கூலி வீதங்கள் மாற்றமுறாது நிலையாகவிருந்தன. கூலி வீதக் குறிகாட்டிகள், தொழில்நுட்ப ஊழியர்களையும் எழுதுவினைஞர்களையும் பொறுத்தவரை 157.3 ஆக மாற்றமுறாதும், சிற்றூழியர்களைப் பொறுத்தவரையில் 182.9 ஆகவும் பள்ளிக்கூட ஆசிரியர்களைப் பொறுத்தவரையில் 141.1 ஆகவும் காணப்பட்டன. 1969ஆம் ஆண்டுடன் ஒப்பிடுமிடத்து ஆண்டுச் சராசரிக் கூலி வீதக் குறிகாட்டிகள் தொழில்நுட்ப ஊழியர்களும் எழுதுவினைஞர்களும் சிற்றூழியர்கள் ஆகியோரைப் பொறுத்தவரையில் 8.9 சதவீதத்தாலும் பள்ளிக்கூட ஆசிரியர்களைப் பொறுத்தவரையில் 6.5 சதவீதத்தாலும் அதிகரிப்பைப் பதிவுசெய்திருந்தன.

1970ஆம் ஆண்டில் அரசாங்க ஊழியர்களது காலாண்டு உண்மைக் கூலி வீதக் குறிகாட்டிகள் 1970இன் கடைசிக் காலாண்டுப் பகுதி தவிர, 1969 இன் தொடர்பான காலாண்டுப் பகுதிகளைவிட அதிகரித்துக் காணப்பட்டன. திரட்டப்பட்ட சம்பளங்கள் 1969 ஒற்றோபர் தொடக்கம் வழங்கப்பட்டதன் விளைவாக 1969ஆம் ஆண்டின் கடைசிக் காலாண்டுப்பகுதியில் உண்மைக் கூலிவீதக் குறிகாட்டிகள் குறிப்பிடத்தக்களவு அதிகரித்தன. எப்படியிருப்பினும் 1969ஆம் ஆண்டின் கடைசிக் காலாண்டிறுதியின் தொடர்பான உண்மைக் கூலிவீதக் குறிகாட்டிகளுடன் ஒப்பிடும்போது, 1970ஆம்

ஆண்டிறுதிக் காலாண்டுப் பகுதியின் உண்மைக் கூலிவீதக் குறிகாட்டிகள் அரசாங்க ஊழியர்களைப் பொறுத்தவரையிலும், அரசாங்கப் பள்ளிக்கூட ஆசிரியர்களைப் பொறுத்தவரையிலும், முறையே 3.5 சதவீதத்தாலும், 3.6 சதவீதத்தாலும் வீழ்ச்சியடைந்தன. அரசாங்க ஊழியர்களினதும், அரசாங்கப் பள்ளிக்கூட ஆசிரியர்களினதும் உண்மைக் கூலிகளின் ஆண்டுச் சராசரிக் குறிகாட்டிகள் 1969ஆம் ஆண்டினைவிட 1970இல் அதிகரித்துக் காணப்பட்டன. தொழில்நுட்ப ஊழியர்களினதும் எழுதுவினைஞர்களினதும் உண்மைக் கூலிகளின் சராசரிக் குறிகாட்டிகள் 2.9 சதவீதத்தால் அதிகரித்தன. 1970ஆம் ஆண்டில் பள்ளிக்கூட ஆசிரியர்களினது அதிகரிப்பு 0.6 சதவீதமாக இருக்க, சிற்றூழியர் வகுப்புக்குரிய அதிகரிப்பு 3.0 சதவீதமாகக் காணப்பட்டது.

பின்வரும் அட்டவணை 1969ஆம் 1970ஆம் ஆண்டுகளுக்குரிய தனியார் துறையில் உள்ள சில கூலிநிருணய சபைக்குட்பட்ட ஊழியர்களது ஆண்டு, காலாண்டுக்குரிய குறைந்தபட்சக் கூலிவீதக் குறிகாட்டி எண்களைக்காட்டுகிறது.

1970ஆம் ஆண்டில் தனியார் துறை ஊழியர்களினது ஆண்டு, காலாண்டுகளுக்குரிய சராசரிக் கூலிவீதக் குறிகாட்டிகள் முன்னைய ஆண்டினைவிட அதிகமாகக் காணப்பட்டன. 1970ஆம் ஆண்டில் விவசாய ஊழியர்களினது ஆண்டுச் சராசரிக் கூலிவீதக் குறிகாட்டி 1.0 சதவீத அதிகரிப்பைப் பதிவுசெய்து 140.2 ஆகக் காணப்பட்டது. கைத்தொழில் வர்த்தகத் துறைகளிலுள்ள ஊழியர்களது சராசரிக் கூலிவீதக் குறிகாட்டி 2.7 சதவீதம் அதிகரித்து, 1969ஆம் ஆண்டின் 161.7இல் இருந்து 1970இல் 166.1 ஆக உயர்ந்தது.

### அட்டவணை II (ஏ) 4

**கூலிநிருணய சபைக்குட்பட்ட தொழில்களிலுள்ள ஊழியர்களின் குறைந்த மட்டக் கூலிவீதக் குறிகாட்டி எண்கள் (1952 = 100)**

| | | விவசாயத் தொழிலாளர்கள் (அ) | | கைத்தொழில் வர்க்கத்திலுள்ள தொழிலாளர்கள் (ஆ) | | கூலிநிருணய சபைக்குட்பட்ட தொழிலாளர்கள் (இ) | |
|---|---|---|---|---|---|---|---|
| | | மிகக் குறைந்த கூலிவீதக் குறிகாட்டி | உண்மைக் கூலிவீதக் குறிகாட்டி | மிகக் குறைந்த கூலிவீதக் குறிகாட்டி | உண்மைக் கூலிவீதக் குறிகாட்டி | மிகக் குறைந்த கூலிவீதக் குறிகாட்டி | உண்மைக் கூலிவீதக் குறிகாட்டி |
| 1969 | 1ஆம் காற்பகுதி | 138.8 | 108.7 | 161.6 | 126.6 | 141.2 | 110.6 |
| | 2ஆம் காற்பகுதி | 138.8 | 106.9 | 161.6 | 124.5 | 141.2 | 108.7 |
| | 3ஆம் காற்பகுதி | 138.8 | 106.4 | 161.6 | 124.0 | 141.2 | 108.3 |
| | 4ஆம் காற்பகுதி | 138.8 | 103.4 | 161.8 | 120.6 | 141.2 | 105.2 |
| | சராசரி | 138.8 | 106.3 | 161.7 | 123.9 | 141.2 | 108.2 |
| 1970 | 1ஆம் காற்பகுதி | 139.8 | 101.8 | 162.2 | 118.1 | 142.2 | 103.5 |
| | 2ஆம் காற்பகுதி | 140.3 | 101.3 | 162.3 | 117.2 | 142.7 | 103.0 |
| | 3ஆம் காற்பகுதி | 140.3 | 101.8 | 165.5 | 120.1 | 143.0 | 103.7 |
| | 4ஆம் காற்பகுதி | 140.5 | 101.0 | 174.2 | 125.2 | 144.0 | 103.5 |
| | சராசரி | 140.2 | 101.5 | 166.1 | 120.2 | 142.9 | 103.4 |

மூலம்: தொழிற்றிணைக்களமும், இலங்கை மத்திய வங்கியும்.

அ. தேயிலை வளர்ப்பும் அதன் உற்பத்தியும், இரப்பர் வளர்ப்பும் அதன் உற்பத்தியும், தெங்கு வளர்ப்பும் ஆகிய துறைகளை மட்டும் உள்ளடக்கும்.

ஆ. தெங்குப் பொருட்கள் உற்பத்தி, பொறியியல், அச்சடித்தல், தீப்பெட்டி உற்பத்தி வாகனப் போக்குவரத்து, கப்பற்றுறைமுகம், துறைமுகப் போக்குவரவு, தேயிலை ஏற்றுமதி, இரப்பர் ஏற்றுமதி, திரைப்படம், கட்டடம் என்னும் துறைகளை மட்டும் உள்ளடக்கும்.

இ. விவசாயம், கைத்தொழில் வர்த்தகம் ஆகிய துறைகளிலுள்ள தொழிலாளர்களின் இணைந்த குறிகாட்டிகள்.

1968ஆம் ஆண்டின் ஊழியர்களுக்கான 40ஆம் இலக்க இடைக்கால நாணய மதிப்பிறக்கச் சட்டத்தின் 4(1)ஆம் பிரிவிற்கிணங்க,[1] விவசாய கைத் தொழில் வர்த்தகத் துறைகளில் உள்ள ஊழியர்களுக்கு அதிகப் படிகள் வழங்கப்பட்டதன் காரணத்தால் 1970ஆம் ஆண்டில் முதற்காற் பகுதிக்குரிய கூலிவீதக் குறிகாட்டிகள் முறையே 139.8, 162.2 ஆக உயர்ந் தன. 1970ஆம் ஆண்டின் மூன்றும் காற்பகுதியில் கைத்தொழில், வர்த்தகத் துறைகளின் ஊழியர்களின் சராசரி கூலிவீதக் குறிகாட்டி இரண்டாம் காற் பகுதியின் 162.3ஐ விட 2.0 சதவீத அதிகரிப்பைப் பதிவுசெய்து 165.5 ஆகக் காணப்பட்டது. இது பொறியியற்றுறை ஊழியர்கள் எல்லோருக்கும் 1970 செத்தெம்பர் 1ஆந் திகதி தொடக்கம் கொடுபடக்கூடிய ஆகக்குறைந்த திரட்டப்பட்ட கூலி அதிகரிப்பாகிய ஒரு நாளைக்கு ரூ. 1.35 சதங்கள் கொண்ட அதிகரிப்பினால் ஏற்பட்டதாகும். நான்காம் காற்பகுதியில் விவசாய ஊழியர்களின் சராசரிக் கூலிவீதக் குறிகாட்டி 0.1 சதவீத அதிகரிப்பைப் பதிவுசெய்து 140.3 இல் இருந்து 140.5 ஆக உயர்ந்தது; அதேசமயம் கைத்தொழில், வர்த்தகத்துறை ஊழியர்களின் சராசரிக் குறி காட்டி 165.5இல் இருந்து 174.2 ஆக அல்லது 5.3 சதவீதத்தால் அதி கரித்தது. இது மீண்டும், 1970 நவெம்பர் 1ஆந் திகதி தொடக்கம் தோட் டத் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர் எல்லோருக்கும் வழங்கிய அதி கப் படிகளினாலும், தேயிலை ஏற்றுமதிகளிலீடுபட்டுள்ள எல்லாவகைத் தொழி லாளர்களுக்கும் வழங்கிய மிகக் குறைந்த திரட்டப்பட்ட கூலி அதிகரிப் பாகிய ரூ. 1.35 வழங்கப்பட்டமையாலும் ஏற்பட்டதாகும்.

1970ஆம் ஆண்டில், ஆண்டுச் சராசரி உண்மைக் கூலிவீதக் குறிகாட்டிகள் முன்னைய ஆண்டுக்குரியதைவிடக் குறைவாகக் காணப்பட்டன. 1970 ஆம் ஆண்டில் விவசாய ஊழியர்களின் சராசரி குறிகாட்டி 4.5 சதவீதத்தால் 106.3 இல் இருந்து 101.3 சதவீதத்துக்கு வீழ்ச்சியடைந்தபோது கைத் தொழில், வர்த்தக ஊழியர்களின் சராசரிக் குறிகாட்டி 3.0 சதவீதத்தால் 123.9 இல் இருந்து 120.2 ஆகக் குறைந்தது.

மது, வினாகிரி வர்த்தகங்களிலுள்ள நேரடிப்படியான வீதப்படியான சம்பளத்தைப் பெறும் தொழிலாளர்களின் அடிப்படைக் கூலிகள் 1970 யூன் முதலாந் திகதி தொடக்கம் உயர்த்தப்பட்டுள்ளன. தென்னை வளர்ப்பு வர்த்தகத்திலுள்ள நடத்துனர்களின் மிகக் குறைந்த ஒன்றுதிரட்டிய கூலிகள் 1970, ஒற்றோபர் 1ஆந் திகதி தொடக்கம் ரூ. 25/- ஆல் அதிகரிக்கப்பட்டன.

கோட்டையிலும், புறக்கோட்டையிலும் உள்ள 257 கடைகளிலுள்ள ஊழியர்கட்கு வழங்கவேண்டிய மிகக் குறைந்த சம்பள வீதங்கள், 1970 திசெம்பர் 1ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வந்த கடை, அலுவலக ஊழி யர் சட்டத்தின் கீழுள்ள சம்பள முறைமன்றத்திலும் நிருணயிக்கப்படுகின்றன.

அரியணையுரையில் முன்மொழியப்பட்டவற்றை நடைமுறைக்குக் கொண்டு வருவதுபற்றி விதந்துரைப்பதற்காக விசாரணைக் குழுவொன்றை அரசாங்கம் நியமித்தது. இக்குழு, சம வேலைக்கு சம கொடுப்பனவு, மிகைக் கொடுப் பனவுகள், அதிகரித்த ஊ. சே. நி. உதவுதொகைகளையும், குடிசைக் கைத் தொழில் போன்றவற்றில் தொழில் பார்க்கும் பெண் தொழிலாளர்கட்கு வழங்கப்படும் குறைவுக் கொடுப்பனவுகளை நீக்குதல் போன்றவற்றை உள் ளடக்கிய தொழிலாளர்கள் உரிமைப் பட்டயத்தையொட்டிக் கவனம் செலுத் தும்.

சட்டப்படியான சபைகளிலும் கூட்டுத்தாபனங்களிலும் உள்ள தொழி லாளர்களின் நியதிகளையும், நிபந்தனைகளையுமொட்டி ஆய்வு செய்வதற்காக ஒற்றோபர் மாதத்தில் அமைச்சரவைத் துணைக்குழுவொன்று நியமிக்கப்பட்டது.

1. இச்சட்டத்தின் கீழ் ஊழியர்களுக்கு நாணயப் பெறுமதியிறக்கப்படியும், வாழ்க்கைச் செலவுப் படி அல்லது அவர்களது 1967ஆம் ஆண்டு திசெம்பரில் நிலையாக்கப்பட்ட படியும் வழங்கப்படுகிறது. இச்சட்டத்தின்படி வாழ்க்கைச் செலவுக் குறிகாட்டியின் அடிப்படையில் வழங்கப்படும் வாழ்க்கைச் செலவுப்படி அல்லது சிறப்புப்படி, இச்சட்டத்தின்கீழ் வழங்கப்படும் மொத்தப் படிகளைவிட அதிகரிக்குமாயின் இவ்வதிகரிப்புக்கு ஊழியர்கள் உரித்தானவராவர். 1970 பெப்புருவரியில் வாழ்க்கைச் செலவுக் குறிகாட்டி அதிகரித்தமையால், தேயிலை வளர்ப்பும் அதன் உற்பத்தியும், இறப்பர் வளர்ப்பும் அதன் உற்பத்தியும், தென்னை வளர்ப்பும் அதன் உற்பத்தியும், அச்சுத் தொழில், வாகனத் தொழில் என்பவற்றிலிருந்த ஊழியர்கட்கு வழங்க வேண்டிய படி இச்சட்டத்தின்கீழ் வழங்கப்பட வேண்டிய படியினைவிட அதிகமாக இருந்தது.